**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**04 டிசம்பர் 2015 / 22 ஸஃபர் 1437**

# <u>அல்லாஹ்வுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வதில் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் பண்புகளை அறிதல்</u>

الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” (பக்தியை) அதிகரித்துக் கொள்வதற்காக ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் சிந்தனை செய்வோமாக! அவர்களின் முயற்சிகளையும் ”சுன்னாஹ்” (வழிமுறையையும்) அறிவோமாக! அப்போது நாம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுபட்டு நடப்பதிலும், அல்லாஹ் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து

கொள்வதிலும் சகிப்புத் தன்மையைப் பெற முடியும். திருக்குர்ஆனின் ”அல்-அஹ்ஸாப்” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 21-வது வசனத்தில் அல்லாஹ் அருளியுள்ள கருத்துக்களில் எப்போதும் நாம் சிந்தனை செய்ய வேண்டும்:

لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ اللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُوا اللَّهَ وَالْيَوْمَ
الْآخِرَ وَذَكَرَ اللَّهَ كَثِيرًا ﴿٢١﴾

பொருள்: உண்மை யாதெனில், உங்களுக்கும் உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகின்றவராகவும், அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருபவராகவும் இருக்கின்ற ஒவ்வொருவர்க்கும் அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருந்தது.

ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட வசனம், நாம் உண்மையில் அல்லாஹ்வின் அன்பை இம்மையிலும் மறுமையிலும் அடைய விரும்பினால் அதற்கான ஒரே வழி இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவதாகும் என நமக்கு நினைவூட்டுகிறது. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் சிறந்த தகுதிகளில், அவர்களின் ”அக்லாக்” (அழகிய நடத்தைகளில்) ஒன்று, அவர்களைப் படைத்த அல்லாஹ் உடன் சிறந்த உறவை ஏற்படுத்திக் கொள்வதில் அவர்கள் கடைப்பிடித்த “அதப்” (ஒழுங்குமுறை) ஆகும். மற்ற மனிதர்களுடன் ரசூலுல்லாஹி(ஸல்) கடைப்பிடித்த நன்னடத்தைகளைப் பற்றி நாம் அடிக்கடி

கேள்விப்பட்டிருப்போம். எனினும், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மகிமையும் மேன்மையும், அவர்களை இறைத்தூதராக நியமித்த, அவர்களைப் படைத்த அல்லாஹ்வுடனான அவர்களின் சிறந்த நன்னடத்தைகளிலிருந்து துவங்குகிறது.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி விடக் கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வை மிகவும் விரும்பினார்கள். மற்றவர்களின் கண்களுக்குத் தெரியாமல், தனிமையில் அவர்கள் அல்லாஹ்வைத் தொழும் நேரங்கள் தான் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடையும் நேரங்களாக இருந்தன. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் பார்வையில் சிறப்பான அந்தஸ்துகள் இருந்த போதிலும், சொர்க்கத்தைக் கொண்டு சுபச் செய்தியை அவர்களுக்குக் கூறப்பட்டிருந்த போதிலும் அல்லாஹ்வை நினைவில் கொள்வதை அவர்கள் ஒருபோதும் புறக்கணித்ததில்லை. மக்களுக்கு இஸ்லாத்தின் தூதை எடுத்துரைக்கும் போது பல சோதனைகளையும் சவால்களையும் அவர்கள் எதிர்கொண்ட போதிலும் அவற்றின் கஷ்டங்களை அவர்கள் வெளிப்படுத்தியதில்லை. அல்லாஹ்வின் தூதராக அவர்கள் தேர்தெடுக்கப்பட்டதானது, எவ்வளவு சிறந்த அருட்கொடை என்பதை அவர்கள் மறக்கவுமில்லை.

இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் பின்வரும் ஹதீதை தனது ஹதீதுக் கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இரவுப் பொழுதில், இடை விடாது தொடர்ந்து தொழுகையில் ஈடுபட்டதையும், அதன் காரணமாக இறைத்தூதர்(ஸல்) அவர்களின் கால்கள் வீங்கி விட்டதையும் அவர்களின் மனைவி செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள் கண்டார்கள். அப்போது செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள்: இறைத்தூதர் அவர்களே! ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? உங்களின் அனைத்து பாவங்களையும் மன்னித்து விட்டதாக அல்லாஹ் உங்களுக்கு வாக்குறுதி வழங்கவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள்: எப்போதும் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் அடியாராக நான் ஆக வேண்டாமா?

எனக் கூறினார்கள்.

சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் மிகவும் மேன்மையானவன்!). ஜமாஅத்தார்களே! தன்னைப் படைத்த இறைவனாகிய அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில் இவ்வாறு தான் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் "அதப்" (ஒழுங்குமுறையைக்) கடைப்பிடித்தார்கள். நமது பாசத்திற்குரிய இறைத்தூதர்(ஸல்) அவர்கள், அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய மரியாதையை, சிறப்புத்தன்மையை ஒருபோதும் மறக்கவில்லை. உண்மையில், அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய கண்ணியத்துக்கு நன்றி தெரிவிப்பதற்கான அடையாளமாக, அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதை அவர்கள் அதிகரித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு தான் நாமும் நடந்து கொள்ள வேண்டும். நம்மீது அல்லாஹ் எந்த அளவுக்குத் தனது அருட்கொடைகளைப் பொழிகின்றானோ அந்த அளவுக்கு நாம் அவனை வணங்கி வழிபடுவதை அதிகரித்துக் கொள்ள

வேண்டும். அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்ற உணர்வு நம்மிடம் ஆழமாகக் காணப்பட வேண்டும். காரணம், இவ்வாறு தான், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் விஷயத்தில் நடந்து கொண்டார்கள். அல்லாஹ் நமக்கு ”ரிஸ்க்” (வாழ்வாதாரத்தையும்), இவ்வுலக வாழ்க்கையையும், குடும்பம், மகிழ்ச்சி, நமது உடல், உடல் நலம், ஈமான் (ஓரிறை நம்பிக்கை), அமைதி போன்ற பல அருட்கொடைகளை வழங்கியுள்ளான். அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள இந்த எண்ணற்ற அருட்கொடைகளைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பதற்காக எவ்வளவு நேரத்தை நாம் ஒதுக்கியுள்ளோம்? நாம் அல்லாஹ்வுக்கு நன்றிக் கடனை எப்படி, எந்தளவு செலுத்தியுள்ளோம்? அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்து அடிக்கடி நாம் அவனை வணங்கி வழிபடுகிறோமா? அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள எண்ணற்ற அருட்கொடைகளை ஓரளவாவது அறிந்து கொண்டோம்; அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!) என நிம்மதிப் பெருமூச்சு விடும் அளவுக்கு நமது நிலை உள்ளதா? என்றெல்லாம் நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

இந்நவீன உலகில், உலகப் பொருட்களை அடைவதற்கான போட்டி மனப்பான்மைகள் காணப்படுகின்றன. அவற்றின் வலைகளில் நாம் எளிதாக சிக்கிக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. உதாரணமாக, நமது smartphone கைத்தொலைபேசிகளை ஒரு வருடம் பயன்படுத்திய பின் நாம் சலிப்படைந்து விடுகிறோம். பின்பு புதிய மாதிரியான கைத்தொலைபேசி வேண்டுமென விரும்புகிறோம். நம்மிடமுள்ள ஆடைகளைக் கொண்டு நாம் திருப்தியடைவதில்லை. புதிய மரச்

சாமான்களையும், வீட்டுப் பயன்பாட்டிற்கான சாதனங்களில் சிறந்ததையும், புதிய வாகனங்களையும் நாம் விரும்புகிறோம். அவைகள் நல்ல நிலையில் இருந்த போதும் அவற்றை மாற்றி, புதிய சாதனங்களைப் பெற முயல்கிறோம்.

வசதியான வாழ்க்கையைத் தேடுவதை இஸ்லாம் தடை செய்கிறது என நான் ஒருபோதும் கருதவில்லை. எனினும், சிறந்த வாழ்க்கையைத் தேடும் போது, போட்டி மனப்பான்மைகளில் மாட்டிக் கொண்டு, அதன் விளைவாக, நன்றி தெரிவிக்காதவர்களாகவும், உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் மனப்பான்மையை (கனாஅத்) இழந்தவர்களாகவும் நாம் ஆகிவிடக் கூடாது என்பது தான் இங்கு கருத்தாகும். மேற்கண்ட இரண்டு விஷயங்களை நமது உள்ளங்கள் இழந்து விட்டால் நாம் திசை மாறி விட வாய்ப்புள்ளது. நாம் நமது உள்ளங்களில் அமைதியை இழந்து விடுவோம். நம்மிடம் உள்ளதைக் கொண்டு ஒருபோதும் நாம் திருப்தியடைய மாட்டோம். இறுதியில் நாம் மனச் சோர்வு மற்றும் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவோம்.

எனவே தான் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் பின்வரும் பிரார்த்தனையை நமக்குப் போதித்துள்ளார்கள்:

رَبِّ قَنِّعْنِي بِمَا رَزَقْتَنِي وَ بَارِكْ لِي فِيْهِ وَ اخْلُفْ عَلَيَّ كُلَّ غَائِبَةٍ لِي بِخَيْرٍ

பொருள்: இறைவா! எனக்கு நீ வழங்கியுள்ள "ரிஸ்க்" (வாழ்வாதாரத்தைக்) கொண்டு திருப்தியடையும் மனப்பான்மையை எனக்குத் தருவாயாக! அந்த வாழ்வாதாரங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவாயாக! அவற்றில்

எதனை நான் இழந்து விட்டேனோ அதற்குப் பகரமாக அதனை விடச் சிறந்ததை எனக்கு நீ வழங்குவாயாக! (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் ஹாகிம் ரஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நன்றி தெரிவிப்பதில் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கடைப்பிடித்த நன்னடத்தையானது, அல்லாஹ் உடனான நமது உறவைப் பலப்படுத்தும் என்பது மட்டுமல்ல, நமது உள்ளம் மற்றும் உணர்வுகளில் ஆக்கப்பூர்வமான நல்ல விளைவுகளையும் அது ஏற்படுத்தும். எனவே, நமது பிள்ளைகளை நன்றி தெரிவிப்பவர்களாகவும், அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதை ஒருபோதும் மறக்காதவர்களாகவும் ஆக்குவதற்கு நாம் அவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும்.

குறிப்பாக, வணக்க வழிபாடுகளின் விஷயத்தில் நமது மனோபாவத்தை மாற்றி, சிறப்பாக அமைத்துக் கொள்வது அவசியமாகும். வணக்க வழிபாடுகளை, கடமைகளை நிறைவேற்றி விட வேண்டும் என்பதற்காக மட்டும் நிறைவேற்றக் கூடாது. அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் அடையாளங்களாக அவை அமைய வேண்டும். நாம் அல்லாஹ்வுக்காக "ருகூவு" (குனியும்) போதெல்லாம், ஸஜ்தா செய்வதற்காக பூமியில் நெற்றியை வைக்கும் போதெல்லாம், நோன்பு நோற்கும் போதெல்லாம், மற்ற வணக்க வழிபாடுகளைச் செய்யும் போதெல்லாம் அல்லாஹ்வின் மீதான அன்பையும், அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதையும்

அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்ற வேண்டும். அவன் நமக்கு எண்ணற்ற அருட்கொடைகளையும் அபிவிருத்திகளையும் வழங்கியுள்ளான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வையும் அவனது அருட்கொடைகளையும் மறப்பது அல்லது புறக்கணிப்பது கூடாது.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, அவன் மீது நாம் அன்பு கொள்ளும் பாக்கியத்தையும், அவனை வணங்கி வழிபடுவதில் இன்பத்தையும் நமக்கு வழங்குவானாக! பாவங்களெல்லாம் மன்னிப்பட்ட அவனது நல்லடியார்களில் நின்றும் நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.